**Spl.SC.No. 43/2019** Dated:. 11.02.2026

( 1, 3, 5 ஆவது எதிரிகள் ஆஜர். எதிரிகள்2, 4, 6 முதல் 8 ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355 ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது,.)

**அ.சா. 3 சுகுணாபாரதி**

**மனுவின் அடிப்படையில் மீண்டும் அழைக்கப்பட்டு 5, 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் சம்பவ சமயத்தில் எந்த பள்ளியில் என்ன வகுப்பு படித்துக்கொண்டிருந்தேன் என்றால் பார்த்திபனூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் 9 ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தேன். என் வீட்டிற்கும் உச்சிகாளியம்மன் கோவிலுக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 50 – 70 மீட்டர் தூரமிருக்கும். உச்சிகாளியம்மன் கோவிலுக்கும், பார்த்திபனூர் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் அரை கிமீ – 1 கிமீ தூரம் இருக்கும். சம்பவ தினத்தன்று நான் எந்த கடைக்கு சென்றேன் என்றால் காய்கறி கடைக்கு காய்கறி வாங்க சென்றேன். அந்த காய்கறி கடை பெயர் மற்றும் உரிமையாளர் தெரியாது. கடை தெருவிற்கு சென்று வீட்டிற்கு திரும்பும்போது மணி எத்தனை இருக்கும் என்றால் மாலை 4–5.00 இருக்கும். எங்கள் வீட்டிலிருந்து என் பெரியப்பா மதுரைவீரன் வீடு எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் நடந்து சென்றால் இரண்டு நிமிடத்தில் செல்லக்கூடிய தூரம். உச்சிகாளியம்மன் கோவில் அருகே என் பெரியப்பாவை பார்த்தபோது அடிபட்டு கீழே விழுந்தாரா என்றால் ஆமாம். என் பெயரிப்பாவுக்கு காயங்கள் ஏற்பட்டு சட்டையில் இரத்தம் இருந்தது என்றால் சரிதான். சாட்சி முனியசாமிக்கும் இரத்தக்காயங்கள் ஏற்பட்டு சட்டையில் இரத்தம் இருந்தது என்றால் சரிதான். உச்சிகாளியம்மன் கோவில் தெரு தென்வடல்தெரு என்றால் சரியல்ல, கிழமேல் தெரு. சம்பவம் கிழமேல்

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.11 15:24:06 +0530

தெருவில் எந்த திசையில் நடந்தது என்றால் தெற்கு திசையில். என் பெரியப்பா கீழே விழுந்த இடத்தில் மண்ணில் இரத்தம் இருந்ததா என்றால் இல்லை. புதுத்தெருவிற்கு செல்லக்கூடிய பாதையில் மக்கள் சென்று வருவார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய இடத்திற்கு எவ்வளவு நேரம் கழித்து போலிசார் வந்தார்கள் என்றால் 6.00 மணிக்கு வந்தார்கள், அரை மணி நேரம் கழித்து வந்தார்கள். என்னிடம் போலிசார் விசாரித்து வாக்குமூலம் பெற்று கையெழுத்து வாங்கிக்கொண்டார்களா என்றால் வாங்கிக்கொண்டார்கள். என்னை டிஎஸ்பி வழக்கு சம்பந்தமாக 18 ம் தேதி விசாரித்தார்கள். டிஎஸ்பி என்னை விசாரிக்கும்போது முதல் விசாரணையில் சொன்னதுபோல் என் பெரியப்பாவை அஜித் முள்கம்பால் முதுகில் அடித்தார் என சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் வினோத் முனியசாமியை முள் கம்பால் வலது தோளில் அடித்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்ன நாளில் சொன்ன இடத்தில், விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், சாட்சி முனியசாமி உறவினர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதன்முதலில் கொடுத்த புகார் வாக்குமூலம் வழக்கிற்கு விரோதமாக இருந்ததால் டிஎஸ்பி மறைத்துவிட்டார் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.11 15:24:12 +0530

**மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

5,6 எதிரிகள் தரப்பில் செய்த குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்ததால் தனியாக குறுக்கு விசாரணை இல்லை.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.11 15:24:18 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

**Spl.SC.No. 43/2019** Dated:. 11.02.2026

( 1, 3, 5 ஆவது எதிரிகள் ஆஜர். எதிரிகள்2, 4, 6 முதல் 8 ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355 ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது,.)

**அ.சா. 5 பாலமுருகன் த/பெ. மலையாளம்**

**மனுவின் அடிப்படையில் மீண்டும் அழைக்கப்பட்டு 5, 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய காலகட்டத்தில் நான் என்ன வேலை பார்த்துக்கொண்டிருந்தேன் என்றால் மேளம் வாசித்து கொண்டிருந்தேன். நான் காலையில் மேளம் வாசிக்க சென்றால் வீடு திரும்புவதற்கு மாலை 6.00 மணி ஆகும் என்றால் சில நேரங்களில் அதற்கும் கூடுதலாக கூட ஆகும். சாட்சி முனியசாமி மற்றும் மதுரைவீரன் ஆகியோர்கள் எனக்கு உறவினர்கள் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீட்டிலிருந்து உச்சிகாளியம்மன் கோவில் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 50 மீ. உச்சிகாளியம்மன் கோவில் அருகில் நான் சென்றபோது மணி எத்தனை இருக்கும் என்றால் மாலை 5.00 மணி இருக்கும். நான் போய் பார்க்கும்போது மதுரைவீரன் கீழே விழுந்துகிடந்தார் என்றால் சரிதான். அவருக்கு சட்டையில் இரத்தம் இருந்தது என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு சென்ற 1/4 மணி நேரத்தில் போலிசார் வந்துவிட்டார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக டிஎஸ்பி என்னை எப்போது விசாரித்தார் என்றால் அப்போதே விசாரித்துவிட்டார். டிஎஸ்பி என்னை விசாரிக்கும்போது முதல்விசாரணையில், மதுரைவீரனை பாலகிருஷ்ணன் அடித்ததாக சொல்லியுள்ள விவரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. சரவணன் முனியசாமியை முள்குச்சியால் அடித்தார் என டிஎஸ்பி விசாரிக்கும்போது சொல்லவில்லை என்றால் சரியல்ல. மதுரைவீரனையும் முனியசாமியையும் பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.11 15:24:32 +0530

நான் அனுப்பி வைத்தேன் என சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில், விதத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும், நான் உச்சிகாளியம்மன் பகுதிக்கே செல்லவில்லை என்றாலும் சரியல்ல. அ.சா.1 உறவினர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

5,6 எதிரிகள் தரப்பில் செய்த குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்ததால் தனியாக குறுக்கு விசாரணை இல்லை.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.02.11 15:24:37 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)